| 43. | Mr. இராசேந்திரம் Rev & Mrs. கிச்கொக் |  | 14462.00 |
| 44. | Mr & Mrs. A. தம்பிமுத்து |  | 10000.00 |
| 45. | Miss. G. வத்சலா |  | 650.00 |
| 46. | Miss. ஜெயராணி மண்டலநாயகம் |  | 2600.00 |
| 47. | திரு. V. நல்லதம்பி |  | 200.00 |
| 48. | திரு S.K. யேசுதாசன் |  | 2000.00 |
| 49. | திருமதி. ஜெயமலர் இரத்தினம் |  | 2000.00 |
| 50. | திரு.திருமதி. ஜோஜ் டேவிட் |  | 5000.00 |
| 51. | திரு.வல்லிபுரம் ஜெயராஜன் |  | 2000.00 |
| 52. | திரு.N. இரத்தினம் |  | 3500.00 |
| 53. | கலாநிதி திருமதி. J. சிவலக்ஷ்மி |  | 15000.00 |
| 54. | திருமதி.பூரணம் சின்னத்துரை |  | 5000.00 |
| 55. | திரு.J..அருளையா |  | 10000.00 |
| 56. | செல்வி. கிறிஸ்ரீன் அபிஷா ஜெபராஜ் |  | 1500.00 |
| 57. | செல்வி. கிறேஸ் வர்ஷா ஜெபராஜ் |  | 1000.00 |
| 58. | செல்வி. இராசமணி செல்லையா |  | 6645.00 |
| 59. | திரு. M. ஞானசிகாமணி |  | 5200.00 |
| 60. | திருமதி. சிவஞானம் |  | 2000.00 |
| 61. | திரு. செ. சந்தியாப்பிள்ளை |  | 5000.00 |
| 62. | திரு. R.S. செல்வநாயகம் |  | 16000.00 |
| 63. | திருமதி. S.V. பத்மாவதி |  | 500.00 |
| 64. | திருமதி. நேசமணி சபாரத்தினம் |  | 3000.00 |
| 65. | திரு. ஜ. ஞானப்பிரகாசம் |  | 1500.00 |
| 66. | Dr & Mrs. ஜெயரத்தினம் |  | 92000.00 |

| | பெயர் | 2017 | தற்போதைய மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 67. | வேலுப்பிள்ளை | | 500.00 |
| 68. | பாலகிருஷ்ணன் | | 2050.00 |
| 69. | மைதிலி ஞானசிகாமணி | | 400.00 |
| 70. | புஸ்பமணி தம்பு | | 500.00 |
| 71. | ராஜா சிறிசுந்தரேசன் | | 5000.00 |
| 72. | திரு. V. சரவணன் | | 200.00 |
| 73. | திரு.R.S.ரொபேர்ட்சன் | | 2500.00 |
| 74. | Mrs. தேவமணி டேவிட் வல்லிபுரம் | | 1000.00 |
| 75. | Mr.E.K. சதாசிவன் | | 2000.00 |
| 76. | Mrs. T. புஸ்பமலர் | | 20000.00 |
| 77. | Mr. A. இன்பராஜா | | 10000.00 |
| 78. | Mr & Mrs.கிறிஸ்ததாஸ் | | 1000.00 |
| 79. | Mrs.புஸ்பமலர் தம்பிராஜா | | 10,000.00 |
| 80. | Mrs.சின்னம்மா யோன் | | 2000.00 |
| 81. | Miss.J.மேரி | | 1000.00 |
| 82. | Mrs.கனகம் அலன் | 10,000.00 | 15000.00 |
| 83. | Mr.சௌந்தரதாசன் | | 3000.00 |
| 84. | Mrs.A.முருகேசம்பிள்ளை | | 25,000.00 |
| 85. | Mr.W.G.அன்னப்பா | | 1000.00 |

மௌனம் என்பது,
வாய் பேசாமல்
இருத்தல் என்பதல்ல,
மனம் பேசாமல் இருக்க
வேண்டும். மனம் பேசாமல்
இருப்பதற்கான
பயிற்சியே மௌனம்.

# விசேட நன்கொடை – 2017

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Miss.G.ரட்ணம் | 1800.00 |
| 2. | Mr.Mrs.கந்தசாமி | 500.00 |
| 3. | Mrs.A.அசானி ஜெயராஜசிங்கம் | 1000.00 |
| 4. | Miss.C.நிசானி ஜெயராஜசிங்கம் | 1000.00 |
| 5. | Mr.Mrs.அன்புராஜா | 6000.00 |
| 6. | Mr.Mrs.சதீஸ்குமார் | 2000.00 |
| 7. | Mr.K.கனிஸ்ரன் | 200.00 |
| 8. | Mr.B.பேணாட் | 500.00 |
| 9. | Mr.Mrs.யோகராஜா | 1000.00 |
| 10. | Dr.Mrs.J.G.சீவரட்ணம் | 2000.00 |
| 11. | Mr.பிரதீப் கிருஸ்ணபாலன் | 5000.00 |
| 12. | Mr.நிசான் கிருஸ்ணபாலன் | 5000.00 |
| 13. | Mr.Mrs.ஜெபராஜ் | 500.00 |
| 14. | Mr.Mrs.சிறீவிமலேஸ்வரன் | 2000.00 |
| 15. | Mrs.V.நவரட்ணம் | 1000.00 |
| 16. | Miss.A.பியூலா | 1000.00 |
| 17. | Mr.Mrs.அதிசயராஜா | 2000.00 |
| 18. | Mr.M.P.தேவவசீகரன் | 500.00 |
| 19. | Mrs.ரஞ்சி | 5000.00 |
| 20. | Mr.Mrs.தர்மசீலன் | 400.00 |
| 21. | Miss.T.C.அனுஜிற்றா | 500.00 |
| 22. | Mrs.S.ஆகாஸ் | 500.00 |
| 23. | Mr.Mrs.T.இரவீந்திரன் | 500.00 |
| 24. | Miss.விவேக்கா தேவவசீகரன் | 500.00 |
| 25. | Miss.J.இயேசுசகாயம் | 5000.00 |
| 26. | Mr.A.ஆனந்தநாயகம் (FD) | 100,000.00 |
| 27. | Mrs.S.சற்குணசிங்கம் | 400.00 |
| 28. | Mr.Mrs.நிமலன் | 500.00 |
| 29. | Mr.Mrs.கில்பேட் | 3000.00 |
| 30. | பெயர் குறிப்பிடாதது | 100.00 |

# நன்றிக் கொடை – 2017

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Miss.J.இயேசுசகாயம் | 1000.00 |
| 2. | Mrs.K.ஞானரட்ணம் | 1700.00 |
| 3. | Mr.Mrs.ஜெயராஜசிங்கம் | 500.00 |
| 4. | Miss.கிறிசோ தவராஜா | 500.00 |
| 5. | Mrs.S.ஜெயராஜசிங்கம் | 500.00 |
| 6. | Mrs.G.இராசமணி | 2000.00 |
| 7. | Mrs.P.S.ஜோயல் | 653.00 |
| 8. | Mrs.J.செல்வநாயகம் | 3550.00 |
| 9. | Mr.J.யேசுதாசன் | 4500.00 |
| 10. | Mr.P.A.இராஜகுமார் | 2000.00 |
| 11. | Mr.Mrs.தர்மசீலன் | 100.00 |
| 12. | Mr.Mrs.அதிசயராஜா | 500.00 |
| 13. | Mr.J.நிரோஜன் | 500.00 |
| 14. | Miss.அசானி ஜெயராஜசிங்கம் | 1500.00 |
| 15. | Miss.நிசானி ஜெயராஜசிங்கம் | 1500.00 |
| 16. | Mr.சியாம் சௌந்தரதாசன் | 1000.00 |
| 17. | Mrs.J.ஆர்த்தி | 500.00 |
| 18. | Mr.Mrs.றொசான் | 17500.00 |
| 19. | Mr.Mrs.டெறிக் J | 5000.00 |
| 20. | Miss.T.C.அனுஜிற்றா | 1500.00 |
| 21. | Mrs.பந்துசேனா | 100.00 |
| 22. | Mrs.K.சிவஞானம் | 2000.00 |
| 23. | Mr.J.ஜெசுரன் | 1000.00 |
| 24. | Miss.D.மண்டலநாயகம் | 2000.00 |
| 25. | Miss.N.தர்மினா | 1000.00 |
| 26. | Miss.வேஜீனா யோகராஜா | 1000.00 |
| 27. | Mrs.சாமிலா N | 500.00 |
| 28. | Mrs.சர்மிலா N | 500.00 |
| 29. | Mr.K.பிரகீஸ் | 1500.00 |

| | | |
|---|---|---|
| 30. | Miss.A.மிர்நாளினி | 1000.00 |
| 31. | Mr.N.டிலான் | 500.00 |
| 32. | Mrs.J.ஆர்த்தி | 1000.00 |
| 33. | Mr.அருண்ராஜ் T | 500.00 |
| 34. | Mrs.P.சுலக்சனா செல்வரட்ணம் | 500.00 |
| 35. | Mr.R.ஜோஸ்பிரவீன் | 1000.00 |
| 36. | Mr.J.கனிஸ்ரன் | 200.00 |
| 37. | Mr.N.டில்சான் | 500.00 |
| 38. | Miss.ஆராதனா அதிசயராஜா | 2000.00 |
| 39. | Miss.அகல்யா இராசநாயகம் | 5000.00 |
| 40. | Dr.Mrs.J.G.சீவரட்ணம் | 2000.00 |
| 41. | MR.G.சுபாஸ்கரன் | 1000.00 |
| 42. | Mas.D.அபிசேக் | 1000.00 |
| 43. | Mr.பாஸ்கரன் இரவிச்சந்திரன் | 500.00 |
| 44. | Mrs.P.ஞானசிகாமணி | 15500.00 |
| 45. | Mrs.S.யோகமலர் | 400.00 |
| 46. | Mr.Mrs.கௌதமன் | 2000.00 |
| 47. | Mrs.G.ஞானபரணம் | 200.00 |
| 48. | பெயர் குறிப்பிடபடாதது | 1000.00 |

**என்ன நடந்தாலும்**
**எதை இழந்தாலும்**
**சோர்ந்து போகமாட்டேன்**
**காரணம்**
**நான் 100 வெற்றிகளை பார்த்தவன்**
**அல்ல**
**1000 தோல்விகளை பார்த்தவன்..**


# வருடாந்த ஸ்தோத்திர விற்பனவு - 2017

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Mr.Mrs.சதீஸ்குமார் | 1000.00 |
| 2. | Mrs.பந்துசேனா | 2700.00 |
| 3. | Mrs.ரூபிமைக்கேல் | 800.00 |
| 4. | Mrs.M.P.தேவவசீகரன் | 3700.00 |
| 5. | Mr.Mrs.அன்புராஜா | 650.00 |
| 6. | Mr.Mrs.டிலான் | 2050.00 |
| 7. | Mr.Mrs.தேவரூபன் | 1750.00 |
| 8. | Mr.Mrs.தவறஞ்சிற் | 4350.00 |
| 9. | Mrs.மேரி இரவீந்திரன் | 800.00 |
| 10. | Mrs.G.ரட்ணம் | 1000.00 |
| 11. | Mrs.ஜெபா கிருஸ்ணமூர்த்தி | 2000.00 |
| 12. | Mrs.ஒலிவர் குணராஜா | 3080.00 |
| 13. | Mrs.லில்லி சின்னையா | 1375.00 |
| 14. | Mrs.T.மைக்கேல் | 425.00 |
| 15. | Dr.J.P.ஜெயதேவன் | 3250.00 |
| 16. | Mr.A.யேசுரட்ணம் | 1700.00 |
| 17. | Mrs.பாஸ்கரன் | 400.00 |
| 18. | Mrs.மண்டல நாயகம் | 400.00 |
| 19. | Mr.S.விஜயகுலசிங்கம் | 100.00 |
| 20. | Mrs.K.சற்குணசிங்கம் | 1000.00 |
| 21. | Miss.V.N.இயேசுசகாயம் | 500.00 |
| 22. | Mrs.S.இயேசுதாசன் | 500.00 |
| 23. | Mrs.புளோரன்ஸ் | 500.00 |
| 24. | Mrs.சர்மிளா | 1000.00 |
| 25. | Mrs.A.செபமணி | 900.00 |
| 26. | Mrs.J.செல்வநாயகம் | 250.00 |
| 27. | Mr.Mrs.தர்மசீலன் | 1000.00 |
| 28. | Mrs.T.இன்பராஜா | 750.00 |
| 29. | Mrs.M.G.கிருபைநாதன் | 300.00 |
| 30. | Mr.Mrs.மனோகரதாசன் | 600.00 |
| 31. | Mr.Mrs.கந்தசாமி | 100.00 |
| 32. | Mr.Mrs.ஜெயராஜசிங்கம் | 750.00 |

## ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகள் சேகரிப்பு – 2017

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 01 | Mas.அபிசேக் டிலான் | 15,000.00 |
| 02 | Mrs.ஒக்சனா சதீஸ்குமார் | 10000.00 |
| 03 | Miss.கிறிஸ்ரீனா அனுஜிற்றா T | 10000.00 |
| 04 | Mas.சஞ்சீவன் N | 6700.00 |
| 05 | Mas.ஆர்வின் ஜெயதேவன் | 1600.00 |
| 06 | Mas.ஜோயல் செரோன் P.S | 1000.00 |
| 07 | Mas.டேமியன் தர்மகுமாரன் | 1000.00 |
| 08 | Mrs.ஜோலின் சுகுமாரன் | 800.00 |
| 09 | Mas.கிறிஸ்ரோ அபிசாந் J (2016) | 5000.00 |

***சிலர் அன்பை வார்த்தையால்***
***உணர்த்தலாம்***
***சிலர் அன்பை உணர்வுகளால்***
***உணர்த்தலாம்***
***ஆனால்!***
***சிலர் அன்பு புரியாது***
***அதை காலம் உணர்த்தும் போது த***
***கண்கள் கலங்கும்***





## திருமதி.S.சந்தியாப்பிள்ளை
## ஓய்வுநாள் பாடசாலை அதிபர்

# ஓய்வுநாள் பாடசாலை அறிக்கை

# ஓய்வு நாட் பாடசாலை ஆண்டறிக்கை – 2017

"பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்கு கிரீடம் பிள்ளைகளின்
மேன்மை அவர்கள் பிதாக்களே"
நீதிமொழிகள் - 17:6

சென்ற வருடம் முழுவதும் கரத்தர் தமது செட்டையின் மறைவில் வைத்துப் பாதுகாத்த கிருபைக்காக நன்றி செலுத்தி இவ் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள் அவர்களை தடை பண்ணாதிருங்கள் என்ற வேத வசனத்திற்கு அமைய பிள்ளைகளுக்காக நடாத்திவரும் ஞாயிறு பாடசாலை வாரம் தோறும் ஒழுங்காக நடைபெற்று வருகிறது இவ் வருடம் 40 கிழமைகள் வகுப்புகள் நடைபெற்றன 18 பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள்.

எமது ஓய்வுநாட் பாடசாலை ஆராதனையின் பின்னர் காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. வகுப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர் 15 நிமிடம் பாடல்கள், கதைகள், இறைவார்த்தை மூலம் வழிபாடு நடாத்தப்படும் சிற்றுண்டி வழங்கியதன் பின்னர் பிள்ளைகள் தங்கள் வகுப்புகளுக்கு கற்றல் செயற் பாடுகளுக்கு செல்வார்கள்.

## ஆசிரியர்கள் மற்றும் வகுப்பு நிலை விபரங்கள்

**திருமதி.தேவறஞ்சினி ஜெபராஜா**
**ஆரம்பநிலை ஆசிரியர், வயது பிரிவு 4 – 5, 6**

**திருமதி.பத்மலோஜினி ஞானசிகாமணி**
**பாலர்நிலை ஆசிரியர், வயது பிரிவு 7 – 8**

**செல்வி சில்வியா மஞ்சு சவுந்தரதாஸன்**
**இளநிலை I ஆசிரியர், வயது பிரிவு – 9**

**திருமதி.ஞானமணி கிருபைநாதன்**
**இளநிலை II ஆசிரியர், வயது பிரிவு – 10**

**திருமதி விஜயவானி பிறின்ஸ் ஜெயதேவன்**

நடுநிலை I ஆசிரியர், வயது பிரிவு – 12

**திருமதி.ரட்னேஸ்வரி விஜயகுலசிங்கம்**

நடுநிலை III ஆசிரியர், வயது பிரிவு – 14

**செல்வி. நேசமலர் அருளையா**

முதநிலை ஆசிரியர், வயது பிரிவு – 15

**திருமதி.S.சந்தியாப்பிள்ளை**

அதிபர்

ஓய்வு நாட்பாடசாலை

**திருமதி. விஜயவாணி ஜெயதேவன்**

உதவி அதிபர்,

ஓய்வுநாட் பாடசாலை

## பிள்ளைகளால் நடாத்தப்பட்ட ஆராதனைகள்

ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளால் இவ்வருடம் அனைத்து வழிபாடுகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இம்முறை குருத்தோலை ஞாயிறு வழிபாடு செல்வன் S.ஜொய்சன் தலைமையில் நடைபெற்றது. இறைசெய்தியினை அருட்பணி I.இராஜ்குமார் அவர்கள் வழங்கினார். அது மட்டுமன்றி அன்னையர் தினம், தந்தையர் தினம், சிறுவர் தினம், பிள்ளைகள் விழா ஆராதனையிலும் கலந்து சிறப்பித்தனர்.

## கௌரவிப்பு நிகழ்வு

இவ்வாண்டு அன்னையர் தினவழிபாடு அன்னையர்களால் சிறப்பாக நடாத்தப்பட்டது. அதேபோன்று தந்தையர் தின வழிபாடும் நடைபெற்றது. இவ்வழிபாடு களின் இறுதியில் பிள்ளைகளினால் ஆங்கிலத்திலும் தமிழிலும், கவிதைகள் மற்றும் சிறு உரைகள் அன்னையர் தந்தையர் பற்றி நிகழ்த்தப்பட்டு அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## பிள்ளைகள் விழா

யாழ் பிராந்திய சமயக்கல்வி குழுவினால் ஒழுங்கமைக்கப்பட்ட பிள்ளைகள் விழா நுணாவில் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்விலும் போட்டிகளிலும்

பங்குபற்றி அதிகளவான சான்றிதழ்களையும் கேடயங்களையும் பெற்றுகொண்டனர். அதன் விரபம் பின்வருமாறு.

## வருடாந்த பிள்ளைகள் விழா - 2017

**புதிர்போட்டி**

**12 வயதின் கீழ் பிரிவு – 1ம் இடம்**

T.அனுஜிற்றா

P.ஆர்வின்

T.டேமியன்

J.கிறிஸ்ரோ

**15வயதின் கீழ் பிரிவு – 1ம் இடம்**

P.ஆர்த்தி

N.சாமிலா

S.ஜொய்லின்

Y.மதுஷனா

**குழுப்பாடல் போட்டிகள்**

ஞானப்பாடல் போட்டி - 1ம் இடம்

கீர்த்தனை பாடல் போட்டி - 1ம் இடம்

ஆங்கிலப் பாடல் போட்டி - 1ம் இடம்

**தனிநபர்களுக்கான போட்டி**

**9 வயதின் கீழ் பிரிவு**

அபிஷேக் டிலான்

தனிப்பாடல் - 1ம் இடம்

**12 வயதின் கீழ் பிரிவு**

டேமியன் தர்மகுமாரன்

தனிப்பாடல் 2ம் இடம்

அனிற்றா தவறஞ்சிற்

பேச்சு - 1ம் இடம்

கவிதை எழுதுதல் - 1ம் இடம்

கட்டுரை - 2ம் இடம்

சித்திரம் - 2ம் இடம்

தனிப்பாடல் - 3ம் இடம்

### சி.ஏ.சி.எம் சமயக் கல்விக் குழவின் பிள்ளைகள் விழா

**12 வயது கீழ்பிரிவு**

புதிர் போட்டி - 1ம் இடம்

T.அனிஜிற்றா

P.ஆர்வின்

T.டேமியன்

J.சிறிஸ்ரோ

**15 வயது பிரிவின் கீழ்**

ஜோ ஆன் சொவ்பியா போல்சுரேஷ்

பேச்சு - 1ம் இடம்

கவிதை எழுதுதல் - 3ம் இடம்

## ஓய்வுநாட் பாடசாலை பரீட்சை

இவ்வருடம் பிராந்திய சமயக்கல்விக் குழவின் அனுமதியுடன் எமது ஆசிரியர்களினால் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு பிள்ளைகளுக்கு பரீட்சை நடாத்தப்பட்டது. இப்பரீட்சையில் அதிவிசேட விசேட சித்திகளை பிள்ளைகள் பெற்றுக்கொண்டார்கள். அதிவிசேட சித்திகளை பெற்ற 9 பிள்ளைகளுக்கு 500/= ரூபாய் படி கொடுக்கப்பட்டு பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டார்கள்.

## பிள்ளைகள் தினம் மற்றும் ஆசிரியர் தினம்

சர்வதேச சிறுவர் மற்றும் ஆசிரியர் தின வழிபாடு 08.10.2017 காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. இவ்வழிபாட்டினை ஆசிரியர்களும் ஓய்வுநாட் பாடசாலை மாணவர்களும் இணைந்து நடத்தினார்கள் சிறப்புச் செய்தினை அரு.பணி ஈனோக்

புனிதராஜா அவர்கள் வழங்கினார்கள். ஆராதனையின் பின்னர் கவிதைகள் பேச்சுக்கள் நடைபெற்று ஆசிரியர்களும் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

## குட்டீஸ் கொண்டாட்டம்

யாழ் பிராந்தியத்தின் குட்டீஸ் கொண்டாட்டம் 14.12.2017 அன்று மாதகல் கடற்கரை வளாகத்தில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் வழிபாட்டை அருட்பணி M.ஜெயானந்தன் அவர்கள் நடத்தினார்கள். இந்நிகழ்வில் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வுக்கு உரித்தான விளையாட்டுக்கள், வேதாகம அறிவுப் போட்டிகள், தனி குழு நிகழ்வுகள் பாடல்கள் என்பன இடம்பெற்றது.

## நத்தார் இன்னிசை வழிபாடு

எமது திருச்சபையின் நத்தார் இன்னிசை வழிபாடு 17.12.2017 காலை 7.30 மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெற்றது. இவ் வழிபாட்டில் பிள்ளைகள் பாடல்களை பாடி வழிபாட்டை சிறப்பித்தனர். இப்பாடல்களை பயிற்றுவித்த திருமதி.டொறின் போல் சுரேஷ் போதகரம்மாவிற்கு எமது நன்றிகள்.

## ஒளிவிழா

எமது ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளின் ஒளிவிழா நிகழ்வு 27.12.2017 மாலை 3.00 மணிக்கு ஓய்வுநாட் பாடசாலை அதிபர் திருமதி.S.சந்தியாப்பிள்ளை அவர் களின் தலமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விருந்தினர்களாக யாழ் பிராந்திய குரு முதல்வர் அருட்பணி J.ஞானப்பிரகாசம் மற்றும் A.M.T.M.பாடசாலையின் அதிபர் திரு.S.றஜீவன் மற்றும் எமது திருச்சபையின் அங்கத்தவரான திரு.J.I.தம்பிராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர் பிள்ளைகளின் நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றது.

## நினைவுக் கேடயம்

எமது நிர்வாக செயற்குழுவின் தீர்மானத்தின்படி ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியராக அர்ப்பணிப்போடு பணியாற்றி பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட காலம் சென்ற அமரர் செல்வி.இராசமணி செல்லையா (ஊழியமணி அக்கா) அவர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஓய்வுநாட் பாடசாலையில் சிறந்த மாணவர் ஒருவருக்கு கேடயம் வழங்கி

கௌரவிக்கப்பட்டு நினைவு கூறப்படுவார் என்பதற்கு அமைவாக இவ்வாண்டுக்கான சிறந்த மாணவியாக செல்வி.ஜோஆன் சொவ்பியா போல்சுரேஷ் அவர்கள் ஆசிரியர்கள் ஆசிரிய குழுவினால் தெரிவுசெய்யப்பட்டு நினைவு கேடயம் வழங்கி கௌரவிக் கப்பட்டனர்.

## வெற்றிக் கேடயம்

எமது C.A.C.M.சமயக் கல்வி குழவினரால் பிள்ளைகள் விழா நுணாவில் திருச்சபையின் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அனைத்து பிராந்தியங்களில் இருந்து பிள்ளைகளுக்கிடையே போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் 12 வயதின் கீழ் பிரிவில் உள்ள மாணவர்கள் புதிர்போட்டியில் 04 பேர் கொண்ட குழவாக பங்குபெற்றி வெற்றியினை தழுவி கொண்டனர். 01ம் இடத்தை பெற்றுக்கொண்ட இவர் களுக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்பட்டது. வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் இதனை பயிற்றுவித்த ஆசிரியை செல்வி.S.சில்வியா மஞ்சு அவர்கட்கும் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

## பிள்ளைகளின் காணிக்கை சேகரிப்பு

எமது ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளுக்கென ஒவ்வொருவருடமும் வழங்கும் காணிக்கை சேகரிக்கும் அட்டை இவ்வருடமும் பிள்ளைகட்கு வழங்கப்பட்டது. எமது ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகள் இவ்வருடமும் உற்சாகமாய் சேகரித்து ஆலய பணிக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆண்டவரின் இத்திருப்பணிக்கு உற்சாகமாக சேகரித்து கொடுத்த அனைத்து பிள்ளைகளுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். கடவுளின் வழிநடத்தல் எப்பொழுதும் இவர்களுடன் கூடியிருப்பதாக இவர்களுக்கு ஒத் துழைத்த பெற்றோருக்கு எமது நன்றிகள்.

## காணிக்கை சேகரித்தோரின் விபரம்

| | |
|---|---|
| ஆர்த்தி ஜெயதேவன் | 1600.00 |
| ஜோயேல் ஷெரோன் போல் சுரேஷ் | 1000.00 |
| அபிஷேக் டிலான் | 15,000.00 |
| அனுஜிற்றா தவறஞ்சிற் | 10,000.00 |
| ஜொய்லின் சுதுமாரன் | 800.00 |
| ஒக்சனா சதீஸ்குமார் | 10,000 |

| | |
|---|---|
| சஞ்ஜிவன் நிரஞ்சன் | 7700 |
| டேமியன் தர்மகுமாரன் | 1000 |
| **மொத்தம்** | **47.100** |

## விசேட நன்றிகள்

01. மறுமைக்குள் பிரவேசித்த அமரர்.திருமதி.J.தம்பிராஜா அவர்களின் ஞாபகார்த்த மாக அவரின் குடும்பத்தினர் 10,000 ரூபாவினை கொடுத்து உதவினார்கள். இப்பணத்தின் மூலம் ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளை மனனவசனம் பாட மாக்குவதற்கு ஊக்கமளிக்கும் முகமாக வழங்கப்பட்டது. இப்பணியினை செல்வி நேசமலர் அருளையா அவர்கள் முன்னெடுத்தார்கள் பண உதவி வழங்கிய குடும் பத்தினருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

02. மறுமைக்குள் பிரவேசித்த அன்னப்பா ஞானசிகாமணி அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தினர் 10.000/= ரூபாவினை கொடுத்து உதவினார்கள். இப்பணத்தின் மூலம் அதிகூடிய வரவினை பெற்ற முதல் 10 பிள்ளைகளுக்கு 1000/= ரூபாய் படி வழங்கப்பட்டது.

## ஆசிரியர்களுக்கான கூட்டம்

01. சமய கல்வி குழுவின் இயக்குனர் அருட்பணி டானியல் ரஞ்சிற் அவர்களின் தலைமையில் யாழ் பிராந்திய ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்களுக்கான கூட்டம் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மண்டபத்தில் இவ்வாண்டு 03 தடவைகள் நடைபெற்றது.

02. எமது சபைக்குரு அருட்பணி M.D.போல்சுரேஷ் அவர்களின் தலைமையில் ஓய்வு நாட் பாடசாலையின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட கூட்டமும் ஒளிவிழா நிகழ்வு விடயம் தொடர்பான கூட்டமும் ஓய்வுநாட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

## பதிவுசெய்யப்படாத விடயங்கள்

சென்ற 2016இன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் பதிவு செய்யப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

**12 வயது கீழ்ப்பிரிவு**

அனுஜிற்றா தவறஞ்சிற்

**கட்டுரைப்போட்டி - 2ம் இடம்**

**6 வயது கீழ்ப்பிரிவு**

L.அபிசன்

**தனிப்பாடல் - 1ம் இடம்**


மணனவசனம்

தவறுகளுக்கு மனம் வருந்துகின்றோம்.


## நன்றியுரை

எங்கள் நவாலித் திருச்சபையின் போதகர் வண.M.D.போல்சுரேஷ், போதகரம்மா திருமதி.டொறின் போல்சுரேஷ் ஆகிய இருவரும் ஞாயிறு பாடசாலையின் சகல நிகழ்ச்சிகளிலும் அதிக கரிசனையோடு ஆசிரியர்களையும் பிள்ளைகளையும் ஊக்கப் படுத்தி வழிநடத்தியும் ஆலோசனைகளும் தந்து மிகவும் பயனுடையதாக செய்தார்கள் இவர்களுக்கு ஓய்வுநாட் பாடசாலையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் என்னோடு கூட பணியாற்றுகிற சக ஆசிரியர்கள், ஒத்து ழைத்த, வாலிபர், முது வாலிபர்கள், நிதியுதவி வழங்கியோர், நிர்வாக சங்கத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இனிவரும் புதிய ஆண்டிலும் ஓய்வுநாட் பாடசாலை, பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வுக்கு ஆசிர்வாதமாக அமைய வேண்டும் என வாழ்த்தி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

**திருமதி.S.சந்தியாப்பிள்ளை**
**அதிபர்**
**ஓய்வுநாட்பாடசாலை**


நத்தார் மர விழா


சிறுவர் மற்றும் ஆசிரியர் தின வழிபாடு



தந்தையர் தின வழிபாடும் கௌரவிப்பும்







**செல்வி.ப.ஜெனித்தா**

**செயலாளர்**

# வாலிபர் பணி அறிக்கை

# வாலிபர் சங்க வருடாந்த அறிக்கை– 2017

வாலிபனே ! உன் இளமையிலே சந்தோஷப்படு,
உன் வாலிப நாட்களிலே உன் இருதயம்
உன்னை பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின்
வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட,
ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன்
உன்னை நியாயத்திலே கொண்டு வந்து
நிறுத்துவார் என்று அறி.

பிரசங்கி - 11:9

கடந்த ஆண்டு முழுவதும் எம்மைப்பாதுகாத்து வழிநடத்தி இப் புதிய ஆண்டை காண செய்த தேவனுக்கு நன்றி கூறி இவ் அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

2017 ம் ஆண்டிற்கான முதலாவது வாலிபர் சங்க கூட்டம் 03.02.2017 பிற்பகல் 4.30 மணியளவில் சபைக்குரு வண M.D போல்சுரேஷ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது இதில் வாலிபர்களின் சுற்றுலா தொடர்பாகவும், வாலிபர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் 2017 ம் ஆண்டுக்கான வாலிபர் சங்க கூட்டம் 03 தடவைகள் இடம் பெற்றது.

மேலும் 2017 ம் ஆண்டுக்கான முதலாவது செயற்பாடாக வாலிபர்கள் இணைந்து ஐக்கிய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர் அதன்படி 10/02/2017 அன்று 16 வாலிபர்கள் இணைந்து பள்ளிக்குடா, பூநகரியில் உள்ள கடற்கரை சுற்றுலா மையத்திற்கு சென்று அங்கு பல்வேறு ஐக்கியத்தினை மேற்கொண்டனர்.

பின்பு 26/02/2017 அன்று ஞாயிற்று கிழமை 16 வாலிபர்களும், சபைக்குருவும் இணைந்து நவாலி வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள எமது திருச்சபை அங்கத்தவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கான ஆசிர்வாத ஜெபத்தினை வழங்கினர்.

அத்துடன் வாலிபர்கள் தங்களால் இயன்றவரை குழக்களாக பிரிந்து ஒவ்வொரு மாதமும் 03 வது ஞாயிற்றுக்கிழமை Mini sale நடத்தினர் மேலும் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் வாலிபர்கள் சிறப்பு பாடல்களை பாடி ஆராதனையை

மெருகூட்டினர் அத்துடன் ஒவ்வொரு ஞாயிறும் 2 வது வேதபாடத்தை வாசிப்பதிலும் வாலிபர்கள் தமது பங்களிப்பினை மேற்கொண்டனர்.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் வாலிபர்களால் நடாத்தப்படும் ஈஸ்ரர் ஆராதனை சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. அத்துடன் இவ் வருடம் இடம்பெற்ற வருடாந்த விற்பனை விழாவிலும் வாலிபர்கள் தமது பங்களிப்பினை மேற்கொண்டனர்.

மேலும் கிறிஸ்து பிறப்பு இன்னிசை ஆராதனையிலும் வாலிபர்கள் தமது பங்களிப்பை மேற்கொண்டு கிறிஸ்து பிறப்பு ஆராதனை சிறப்பாக நடைபெற உதவினர் அத்துடன் யாழ் பிராந்திய திருச்சபைகளின் ஒன்றிணைந்த இன்னிசை ஆராதனை உடுவில் திருச்சபையில் இடம்பெற்றது அதில் எமது திருச்சபை வாலிபர்கள் பங்கு பற்றி பாடல்களை பாடினர். அத்துடன் பாடகர் குழு இல்லங்களை சந்திப்பதிலும் வாலிபர்கள் தமது பங்களிப்பினை மேற்கொண்டு இல்லங்களை சிறப்பித்தனர்.

தொடர்ந்து 2017 ம் ஆண்டுக்கான வாலிபர் ஐக்கிய ஒன்று கூடல் 29/12/2017 இரவு திருச்சபையில் இடம்பெற்றது இதில் 16 வாலிபர்கள் பங்கு பற்றி நிகழ்வை சிறப்பித்தனர். இவ் ஐக்கிய ஒன்று கூடலின் இறுதியில் 2018 ம் ஆண்டுக்கான வாலிபர் சங்க பிரதி நிதிகள் தெரிவு இடம் பெற்றது இதில்.

| | பிரதிநிதிகள் | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|
| தலைவர் | **ப.திலக்ராஜ்** | சு.ஜெனித்தா | கி.கனிஸ்ரன் |
| செயலாளர் | **நி.சர்மிலா** | சு.சுலக்ஷனா | தே.விவேகா |
| பொருளாளர் | **தே.தனேஸ்** | யே.நிறோஜன் | நி.டில்ஷான் |

மேல்வரும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் கடந்த ஆண்டு முழுவதும் வாலிபர்கள் தமது செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்கு உதவிய எமது திருச்சபையின் குருவானவர் வண M.D போல்சுரேஷ் போதகர், போதகரம்மா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இதுவரை காலமும் எம்மை வழிநடத்திய தேவன் இனிவரும் ஆண்டுகளிலும் திருச்சபையின் செயற்பாடுகளில் ஈடுபட கிருபையாய் வழிநடத்துவாராக !

**செல்வி.S.ஜெனித்தா**
**செயலாளர்**
**வாலிபர்சங்கம்**

# வாலிபர்களின்
# சுற்றுலா












# வாலிபர்களின் இல்ல சந்திப்பு







# திருமதி.J.N.மனோகரதாசன்
## செயலாளர்

# பெண்கள் சங்க அறிக்கை

# பெண்கள் சங்க வருடாந்த அறிக்கை – 2017

"கர்த்தருக்கு பயப்படுதல் இன்னதென்று
நீ உணர்ந்து தேவனை
அறியும் அறிவை கண்டடைவாய்"

நீதிமொழிகள் 2:5

சென்ற ஆண்டு முழுவதும் எம்மை வழிநடத்திவந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துகொள்கின்றேன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் பின்வருமாறு,

## நிர்வாக சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திருமதி D. போல் சுரேஷ் |
| செயலாளர் | - | திருமதி.J.V.மனோகரதாசன் |
| பொருளாளர் | - | திருமதி.R.விஜயகுலசிங்கம் |

திருச்சபையின் சகல நிகழ்வுகளிலும் பெண்கள் சங்கம் பங்குபற்றி திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். போதகர் அம்மா தலைமையில் மாதாந்த கூட்டங்களை நடாத்தி பல செயற்பாடுகளை முன்னெடுத்தோம்.

## 01. Mini Sale

மாதாந்தம் முதல் ஞாயிறு திருவிருந்து வழிபாட்டின் பின்னர் Mini Sale நடாத்தி வருகிறோம் அதில் கிடைக்கும் பணத்தை தேவைப்பட்டோருக்கு கொடுத்து உதவி வருகிறோம்.

## 02. பெண்கள் தின வழிபாடு

19.03.2017 காலை 7.30 மணிக்கு பெண்கள் தின வழிபாடு நடாத்தப்பட்டது. அன்றைய தினம் இறைசெய்தியை திருமதி.டொறின் போல்சுரேஷ் அவர்கள் வழங்கினார் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 03. நோயாளருக்கான ஜெபவழிபாடு

1. திருமதி.ஏ.பத்மநாதன்
2. திருமதி.டொறின் போல்சுரேஷ்

ஆகியோரின் இல்லங்களில் வியாதியில் விடுதலை வேண்டி ஜெபவழிபாடு பெண்கள் சங்கத்தினரால் நடாத்தப்பட்டது.

### 04. இல்ல ஜெபக் கூட்டம்

மறுமைக்குள் பிரவேசித்தவர்களின் இல்லங்களில் பெண்கள் சங்கத்தினால் ஜெப கூட்டங்கள் நடாத்தப்பட்டு அக்குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தோம்.

1. செல்வி.செபமணி இயேசுசகாயம்
2. செல்வி.றிட்டா ஜெயதேவி மண்டலநாயகம்

### 05. விற்பனவு விழா

எமது ஆலயத்தின் வருடாந்த விற்பனை விழா 15.07.2017 அன்று திருச்சபை வளாகத்தில் மாலை 03.00 மணிக்கு நடைபெற்றது. பெண்கள் சங்கத்தினர் பங்களிப்புச்செய்து ஆலய வளர்ச்சிக்கு உதவினர்.

### 06. யாழ் பிராந்திய பெண்கள் ஐக்கிய ஒன்றுகூடல்

யாழ் பிராந்தியத்தின் C.A.C.M திருச்சபையின் பெண்கள் ஐக்கிய ஒன்றுகூடல் சுதந்திரபுர திருச்சபை வளாகத்தில் நடைபெற்றது. எமது பெண்கள் சங்கத்தினர் கலந்து சிறப்பித்தனர்.

### 07. நத்தார் இன்னிசை வழிபாடு

எமது திருச்சபையின் நத்தார் இன்னிசை வழிபாடு 17.12.2017 அன்று நடைபெற்றது எமது பெண்கள் பாடல்கள் பாடி சிறப்பித்தனர்.

### 08. பெண்கள் ஐக்கிய ஒன்றுகூடல்

எமது வருடாந்த பெண்கள் ஐக்கிய ஒன்றுகூடல் 29.12.2017 காலை 10.00மணி முதல் 12.30வரை நடைபெற்றது பிரதம விருந்தினராக அருட்பணி M.ஜெயானந்தன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வு மதிய போசனத்துடன் நிறைவுற்றது.

### 09. ஆன்மீகக் கூட்டம்

01.04.2017 காலை 9.00மணி முதல் மதியம் 01.00 மணி வரை மெதடிஸ்த திருச்சபையின் நற்செய்தி பணியாளர் திருமதி.S.தேவராஜன் அவர்களால் ஆன்மீக செய்திகளும் செப வழிபாடுகளும் நடாத்தப்பட்டது. எமது பெண்கள் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

### 10. ஜெபவலயக் கூட்டங்கள்

இவ்வருட பெண்கள் சங்கத் தலைவி திருமதி.டொறின் போல்சுரேஷ் அவர் களினால் 08 வலயங்களாக பிரிக்கப்பட்டு சபையாருடைய இல்லங்களில் ஜெபக்கூட்டம் நடாத்தப்பட்டது. இவ் வழிபாட்டில் அநேக பெண்கள் ஒன்றுகூடி தங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எல்லோருமாக இணைந்து ஜெபித்து தங்களுடைய ஐக்கியத்தினை வளர்த்து வருகிறார்கள்.

### 11. அன்னையர் தினம் மற்றும் ஆசிரியர் தின வழிபாடுகள்

எமது அன்னையர் தின வழிபாடு 16.05.2017 காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. அன்றைய தினம் இறைசெய்தியினை திருமதி.J.மித்திரஞ்சன் அவர்கள் வழங்கினார்கள்.

எமது ஆசிரியர்தின வழிபாடு 08.10.2017 காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. அன்றைய தினம் இறைசெய்தியை அருட்பணி ஈனோக் புனிதராஜா அவர்கள் வழங்கினார்கள் இவ்விரண்டு நிகழ்வுகளிலும் பிள்ளைகளால் அன்னையர் கௌரவிக்கப்பட்டனர்.

### 12. அன்பின் பணி

எமது பெண்கள் சங்கத்தினரால் 12.03.2017 அன்று கண்பார்வையினை இழந்தோாரை பராமரிக்கின்ற கைதடி தொழிற்பூங்காவிற்கு சென்று அவர்களுக்காக ஜெபக்கூட்டம் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் அவர்களுடன் கலந்துரையாடி சிற்றுண்டிகள் பரிமாறி மகிழ்ச்சிபடுத்தினர் அதோடு ஈஸ்டர் மதிய உணவிற்கான செலவாக 10,000/= ரூபாவினையும் வழங்கினர்.

## 13. அன்பளிப்பு

இவ்வாண்டு எமது வருடாந்த பெண்கள் ஐக்கிய ஒன்றுகூடல் 29.12.2017 காலை 10.00 மணி முதல் பி.ப.12.30 மணிவரை நடைபெற்றது. இந்நிகழ்வின் போது அனைத்து பெண்களுக்கும் குடைகள் அன்பளிப்பாக வழங்கி எல்லோரையும் மகிழ்ச்சி படுத்தினர்.

## 14. பெண்கள் சங்கத் தலைவி

எமது பெண்கள் சங்கத்தலைவி திருமதி.டொறின் போல்சுரேஷ் பெண்கள் சங்கத்தை நெறிப்படுத்தி ஆன்மிக பாதைகளில் வழிநடத்தி வருகின்றனர். கடந்த 03 வருடங்கள் அவரின் கடமையின் நிமித்தம் வவுனியாவில் இருந்து சனி, ஞாயிறு கிழமைகளில் வருகை தந்து சகல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு வழிநடத்திச் சென்றார். 2017ம் ஆண்டு ஜனவரி யாழ்ப்பாணத்திற்கான இடமாற்றம் பெற்று நிரந்தரமாகவே எமது ஆலய காரியங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

## 15. வருடாந்த கணக்கறிக்கை

### நவாலி 2017ம் ஆண்டின் பெண்கள் சங்க கணக்கு அறிக்கை

| விபரம் | | Bank | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| 2016ம் ஆண்டின் கையிருப்பு | 2012 | 40,000.00 | 32,177.00 | |
| | 2013 | 35,000.00 | | |
| | 2014 | 25,000.00 | | |
| | 2015 | 25,000.00 | | |
| | 2016 | 25,000.00 | | |
| 2017ம் ஆண்டின் வரவு | | | | |
| மாதாந்த சாந்தாப் பணம் | | | 11,200.00 | |
| மாதாந்த சிறுவிற்பனை (Feb-Nov) | | | 16,080.00 | |
| ஆலய விற்பனை (பெண்கள் சங்கம்)July | | | 37,000.00 | |
| 2016ம் ஆண்டின் செலவு | | | | |
| பிராந்திய கூட்டம் (Auto) | | | | 500.00 |
| சுவிஷேசக் கூட்டம் Chiefguest & etc | | | | 950.00 |
| July Chirch sale Eats | | | | 6,029.00 |

**2017ம் ஆண்டின் பெண்கள் சங்க ஒன்றுகூடல் செலவு**

| | | |
|---|---|---|
| 35 Pkt Lunch x 110 | | 3,850.00 |
| 1\2 Kg potato, Servite, Lunch tissue | | 150.00 |
| 4 1\2Kg Chicken (x500) | | 2,250.00 |
| வாழைப்பழம், 1Anchor & 1Kg Sugar | | 660.00 |
| 3\4Kg Onion, One day cup & Auto | | 885.00 |

**2017ம் ஆண்டின் அன்பளிப்பு**

| | | |
|---|---|---|
| Chuef guest | | 700.00 |
| Ladies gift 50x310 (குடை) + 430(1குடை) | | |
| 15,930.00 | | |
| Banni Mission | | 24,000.00 |
| போதகர் அம்மா (Sick) | | 2,000.00 |
| தொழிற் பூங்கா Visit | | 170.00 |
| 2017ம் ஆண்டின் பெண்கள் சங்க கோட்ட | | 3,000.00 |
| மொத்தச் செலவு | 96,457.00 | |
| மொத்த வரவு | | |
| மேலதிக வரவு Cash - 32177.00 + Bank 25000.00 | | 35,383.00 |
| Total | 96,457.00 | 96,457.00 |
| Bank 150,000.00 | | |
| Cash in Hand 35,383.00 | | |

## நன்றியுரை

எமக்குப் பல வழிகளிலும் ஊக்கமளித்து வழி நடத்திய வண. M.D.போல் சுரேஷ் போதகர் அவர்கட்கும், போதகர் அம்மா அவர்கட்கும் எமது நன்றிகள் எமது திருச்சபையின் சகல பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகல பெண்களுக்கும் எமது நன்றிகள் கணக்கறிக்கையைத் தயாரித்தளித்த பொருளாளருக்கும் எமது நன்றிகள் இப்புதிய ஆண்டிலும் சகல பணிகளிலும் இறைவன் எம்மை வழிநடாத்த வேண்டுமென்று பிராத்தித்து இவ்வறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

**திருமதி.J.V.மனோகரதாசன்**
**செயலாளர்**
**பெண்கள் சங்கம்.**

நன்மை செய்தால்..

துரோகத்தை மறந்துவிடு..!

நண்பன் செய்தால்

குற்றத்தை மறந்துவிடு...!

காலம் தந்தால்...

சோகத்தை மறந்துவிடு..!

காதல் தந்தால்...


காயத்தை மறந்துவிடு..!

இன்பம் தந்தால்...

இன்னல்கள் மறந்துவிடு...!

பிரியம் தந்தால்...


பிரிவை மறந்துவிடு...!





## பெண்கள் சங்கத்தினரின் விற்பனவு விழா




யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்
கைதடி
தொழில் பூங்கா
Jaffna Association
for the Visually Handicapped
Kaithadi - Sri Lanka
T.P & Fax : 021 222 7336
MaxAura




தாய்மார்
தினம்



# அருட்பணி M.D.போல்சுரேஷ்
## சபைக்குரு

# சபைக்குருவின் பணி அறிக்கை

# சபைக்குருவானவரின் பணி அறிக்கை

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக"

லூக்கா 1:68

நான் 2014ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து சபையின் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டதன் நிமித்தமாக 3வது வருடத்தை நிறைவு செய்துகொண்டு 4வது வருடத்தில் ஊழியக் குடும்பமாக காலடி எடுத்து வைத்துள்ளோம். எனது குருத்துவ பணியில் 23வது வருடத்தினை நவாலித் திருச்சபையில் நிறைவு செய்திருக்கின்றேன். கடந்துவந்த நவாலித் திருச்சபையின் பணி வாழ்வை நினைவுகூறும் பொழுது எமது அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் அங்கத்துவம் வகிக்கின்ற சபைகளில் நவாலித் திருச்சபையே அதிகூடிய அங்கத்தவர்களை கொண்ட திருச்சபை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திருச்சபையில் அங்கத்துவம் வகித்து விண்ணக வாழ்வுக்குள் சென்ற அடியவர்களின் வாழ்வியலை மீண்டும் திரும்பிப்பார்க்கிற பொழுது பக்தி வைராக்கியத்துடன் விசுவாச பாதையினில் பயனித்தவர்கள் என்பதை காணக்கூடிய தாக இருக்கின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அன்பின் பணியை இத்திருச்சபைக்குள்ளும் திருச்சபையை சார்ந்த சமூகத்துக்குள்ளும் அர்ப்பணிப்போடு பணியாற்றிய அந்த சாட்சிய வாழ்வுக்குள் இவர்களின் சந்ததி சந்ததியாக இப்பொழுதும் நவாலி திருச்சபையில் அதே அர்ப்பணிப்பும் விசுவாச பயனத்தின் முன்நகர்வுகளை கண்டு ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றேன்.

நவாலித் திருச்சபையில் எனக்கு பணியாற்ற கிடைத்தது மன நிறைவையும் மகிழ்வையும் தருகிறது. 2018 ஏப்ரல் மாதத்தோடு இத்திருச்சபையில் நான்கு ஆண்டு களின் ஊழியப் பயனம் நிறைவு பெறுகின்றது. இந்த ஆன்மீக பயணத்தில் நாம் சோர்ந்து போகாமல் உற்சாகமாக பணியாற்றுவதற்கு திருச்சபையின் இறை மக்களில் அநேகர் எங்கள் வாழ்வியலின் பல்வேறு நிலைவரங்களில் எங்களை தாங்கி பலப்படுத்தி வழிநடத்திய உணர்வுமிக்க நேரங்களை நினைத்து கடவுளுக்கும் இறைமக்களுக்கும் உள்ளத்தில் ஆழத்தில் இருந்து எமது நன்றிகளை கூறி எனது நவாலித் திருச்சபையின் 2017ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைப் எனது இறுதி அறிக்கையாக சமர்ப்பிக் கின்றேன்.

## வழிபாடுகள்

2017ம் ஆண்டு வருடப்பிறப்பு வழிபாடு முதல் ஓய்வுநாள் வழிபாடுகள், திருவிருந்து வழிபாடுகள் திருச்சபை அனுஸ்டிக்கும் விசேட வழிபாடுகள் மற்றும் வருட இறுதி நள்ளிரவு வழிபாடுவரை அனைத்தும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறை மக்கள் ஒவ்வொரு வரும் ஆன்மிகத் தாகத்தோடு வழிபாட்டில் உற்சாகமாக கலந்து கொண்டார்கள்.

## வாலிபர் திருப்பணி

எமது திருச்சபையில் வாலிபர்கள் எமது நிகழ்வில் முன்நின்று உழைத்தனர். விற்பனை விழா, சிறப்பு வழிபாடுகளிலும் உற்சாகமாக செயல்பட்டனர். நத்தார் இன்னிசை வழிபாட்டிலும், ஆலய அலங்கரிப்பு ஆகியவற்றில் இரவு பகல் என்று பாராமல் முன்னின்று உழைத்தனர். அனைத்து வாலிபர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள் கின்றேன்.

## பெண்கள் திருப்பணி

எமது திருச்சபை வாழ்வில் பெண்கள் ஐக்கியத்தினரின் பங்களிப்பு அளப்பெரியது. ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அவர்களின் பங்களிப்பு மிகையானது. விற்பனை விழா, மாதத்தின் முதலாவது ஞாயிறு வழிபாட்டில் சிற்றுண்டிகள் விற்பனை செய்வதிலும் மற்றும் விசேட வழிபாடுகள், உபவாசக் கூட்டங்கள், என்பவற்றில் சிறந்த பங்களிப்பை செய்து வருகின்ற அதேவேளை கிறிஸ்மஸ் இன்னிசை ஆராதனையிலும் உற்சாகமாக தமது பங்களிப்பினை செய்து வருகின்றனர். பெண்கள் ஐக்கியத் தினருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

## ஓய்வு நாட்பாடசாலை

எமது ஓய்வுநாட் பாடசாலை அதிபர் திருமதி.S.சந்தியாப்பிள்ளை அவர்களின் தலைமையிலும் உப அதிபர் திருமதி.வாணி பிறின்ஸ் ஜெயதேவன் அவர்களின் உதவி யோடும் ஐந்து ஆசிரியர்கள் உட்பட ஏழு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற் பாட்டில் ஈடுபடுகின்றனர். இவ்வாண்டு 18 பிள்ளைகள் மறைக்கல்வியை கற்று வருகின்றார்கள். ஆலயத்தில் நடைபெற்ற பிள்ளைகள் வழிபாடு, குருத்தோலை வழிபாடு, கிறிஸ்மஸ் இன்னிசை வழிபாடு என்பவற்றில் பங்குபற்றினர் மற்றும் பொது நிகழ்வுகளான தந்தையர் தினம் அன்னையர் தினம், வழிபாடுகளில் கலந்துகொண்டு இவர்களுக்கான கௌரவிப்பினை வழங்கினர். யாழ் பிராந்தியத்தினால் நடாத்தப்பட்ட குட்டீஸ் கொண்டாட்ட

நிகழ்வில் கலந்துகொண்டு கலைநிகழ்வினை வழங்கினர். மேலும் வருடாந்த பிள்ளைகள் விழாவின் போது புதிர்ப்போட்டியில் 13 வயதின் கீழ் பிரிவு, 16வயதின்கீழ் பிரிவு மாணவர்கள் 1வது இடத்தை பெற்றுக் கொண்டனர். ஆங்கிலப் பாடல் ஞானப் பாடல் மற்றும் கீர்த்தனை பாடல் போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்றனர். அதுமட்டுமன்றி தனி போட்டிகளில் மாணவர்கள் 1ம், 2ம் இடத்தை பெற்று திருச்சபைக்கு பெருமை சேர்த்தனர். பிள்ளைகளை பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் பாடல்களை பழக்கிய செல்வி.S.சில்வியா மஞ்சு, திருமதி.Y.றொபினி ஆகியோருக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## இல்ல ஜெபக்கூட்டம்

வழமையான இல்ல ஜெபக்கூட்டங்கள் சிறப்பாக நடந்தேறின அது தவிர இல்லங்களில் நடைபெறுகின்ற விசேட நாட்களுக்கான ஜெபக்கூட்டங்களும் சபைக்குருவினால் நடாத்தப்பட்டது. சபையார் இக்கூட்டங்களில் கலந்து சிறப்பித்து வருகின்றனர்.

## நினைவுக்கேடயம்

எமது நிர்வாகச் செயற்குழுவின் தீர்மானத்தின் படி எமது ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியராக பல ஆண்டுகளுக்கு முன்பதாக பணியாற்றி ஓய்வு நாட் பாடசாலை மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அமரர்.இராசமணி செல்லையா (ஊழிய மணி அக்கா) அவர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஓய்வு நாட்பாடசாலையில் சிறந்த மாணவர் ஒருவருக்கு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டு அவர் நினைவு கூறப்படுவார். இவ்வாண்டுக்கான **சிறந்த மாணவருக்கான விருது செல்வி.P.ஜோஆன்சொவ்பியா** வழங்கப்பட்டது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

எமது திருச்சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 12.06.2016 ஞாயிறு காலை வழிபாட்டுக்கு பின்னர் சபைக்குரு வன.M.D.போல்சுரேஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருடாந்த அறிக்கைகள் அனைத்தும் வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எமது சி.ஏ.சி.ம் திருச்சபையின் யாப்புக்கு அமைவாக 02 வருடங்களுக்கு ஒருமுறை புதிய நிர்வாக தெரிவுகள் நடைபெறுவதற்கு அமைவாக இவ்வருடம் புதிய தெரிவுகள் இடம்பெறவில்லை.

## திருமண வழிபாடு

### எமது திருச்சபையில் நடைபெற்ற திருமணம்

எமது திருச்சபையை சேர்ந்த கந்தசாமி பிரதீப் அவர்களுக்கும் பண்டத்தரிப்பு திருச்சபையை சேர்ந்த பிரபாகரன் தனுஷியா அவர்களுக்கும் 11.10.2017 அன்று சபைக்குரு அருப்பணி M.D.போல்சுரேஷ் அவர்களின் தலைமையில் திருமணவழிபாடு நடைபெற்றது.

### சகோதர திருச்சபைகளில் நடைபெற்ற திருமணம்

எமது திருச்சபையை சேர்ந்த ஆனந்தநாயகம் டெறிக் ஜெசுரன் அவர்கட்கும் அல்பேட் இவோன் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது.

எமது திருச்சபையை சேர்ந்த செல்வி ரவீந்திரநாதன் சோபனா அவர்கட்கும் கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்த யோசப் ஞானசீலன் அவர்கட்கும் நவாலி கத்தோலிக்க ஆலயத்தில், திருமண வழிபாடு நடைபெற்றது.

திருமணத்தின் வழியாக இல்லற வாழ்வுக்குள் பிரவேசித்திருக்கும் தம்பதிகளுக்கு எமது திருச்சபையின் சார்பில் வாழ்த்துதல்களை தெரிவித்து கொள்கின்றோம்.

## நல்லடக்க வழிபாடு

எமது திருச்சபை அங்கத்தவர்களாக செல்வி.செபமணி இயேசுசகாயம், திருமதி.அரியஜோதி முருகேசப்பிள்ளை, செல்வி.றீட்டா ஜெயதேவி மண்டலநாயகம் ஆகியோர் மறுமைக்குள் பிரவேசித்தார்கள். இறைவிசுவாசத்தோடு திருச்சபைக்கும் சமூகத்திற்கும் நற்சாட்சிகளாய் வாழ்ந்த இவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு கடவுளின் ஆறுதல் கிடைக்க மன்றாடுகின்றோம்.

## ஸ்தோத்திர விற்பனை விழா

வருடாந்த ஸ்தோத்திர விற்பனை விழா 02.07.2016 பிற்பகல் 03 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெற்றது. டென்மார்க் தேசத்திலிருந்து வருகைதந்த திரு. திரு.J.I.தம்பிராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விற்பனையை ஆரம்பித்து வைத்தார்கள். சபையாரின் பங்களிப்போடு சிறப்பாக நடைபெற்றது.

## சர்வதேச தினங்களின் வழிபாடு
## தந்தையர் தினம்

சர்வதேச தந்தையர்தினத்தை முன்னிட்டு சிறப்புவழிபாடு 18.06.17 ஞாயிறு காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது. சபைக்குரு அருட்திரு.போல் சுரேஷ் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற இவ் வழிபாட்டுக்கு அருட்பணி A.ஜெயகுமாரன் தந்தையர் பற்றி சிறப்புரையை வழங்கினார். ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளினால் தந்தையர் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## சர்வதேச சிறுவர் மற்றும் ஆசிரியர் தினம்

சர்வதேச சிறுவர் மற்றும் ஆசிரியர் தின வழிபாடு 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. இவ்வழிபாட்டினை ஆசிரியரும் ஓய்வுநாட்பாட சாலை மாணவர்களும் இணைந்து நடத்தினார்கள். சிறப்புச் செய்தியினை அருட்பணி P.ஈனோக் புனிதராஜா வழங்கினார். ஆராதனையின் பின்னர் கவிதைகள், பேச்சுக்கள் நடைபெற்று ஆசிரியர் களும் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

## சர்வதேச மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 19.03.2017 ஞாயிறு காலை 7.30 மணிக்கு மகளிரினால் சிறப்பு வழிபாடு நடாத்தப்பட்டது. சிறப்புச் செய்தியினை எமது திருச்சபையின் போதகரம்மா திருமதி.டொறின் போல்சுரேஷ் அவர்கள் வழங்கினார்.

## சர்வதேச அன்னையர் தினம்

சர்வதேச அன்னையர் தின சிறப்பு வழிபாடு 14.05.2017 ஞாயிற்றுகிழமை காலை 7.30 மணிக்கு அன்னையர்களினால் நடாத்தப்பட்டது. அன்னையர்தின சிறப்பு செய்தியினை யாழ்ப்பாண கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் திருமதி.ஜெயந்தி மித்திரரஞ்சன் அவர்கள் வழங்கினார்கள். ஆராதனையின் பின்னர் பிள்ளைகளால் அன்னையர் கௌரவிக்கப்பட்டார்கள்.

## திருமுழுக்கு

இவ்வாண்டு செல்வி.ஏஞ்சல் ஆராதனா அதிசயராஜாவிற்கு குழந்தை ஞானஸ்ஞானமும், செல்வி ஜொயெலா அகல்யா இராசநாயகம் மற்றும் திருமதி.நான்சி துவாரகா அருண்ராஜ் ஆகியோருக்கு வளர்ந்தோர் ஞானஸ்தானமும் வழங்கப்பட்டது. கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்ந்த இவர்களை வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் தொண்டராக வாழ இறைவன் அருள்புரிவாராக.

## 157வது வருட நிறைவு வழிபாடு

நவாலி திருச்சபையின் 157வது வருட நிறைவை முன்னிட்டு நன்றி செலுத்தும் திருவிருந்து வழிபாடு 27.11.2016 திருவிருந்து வழிபாடாக சபைக்குரு வண.M.D.போல்சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. அருட்திரு A.V.இயேசதாசன் போதகர் அவர்கள் இறைசெய்தியை வழங்கினார் முன்னாள் செயலாளர் திரு.இயேசுரட்னம் அவர்களினால் திருச்சபையின் வரலாற்று நிகழ்வுகள் நினைவு கூறப்பட்டது. அருட்திரு.A.V.இயேசுதாசன் போதகர் அவர்களின் ஜெபம் இறை ஆசீர்வாதத்துடன் இவ் வழிபாடு முடிவுற்றது.

## ஓய்வுநாட் பாடசாலைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு

நித்திய வாழ்வுக்குள் பிரவேசித்த **திருமதி.J.I.தம்பிராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக** அவர்களின் குடும்பத்தினர் Rs.10000/= ரூபாவினை கொடுத்து உதவினார்கள் இப்பணத்தின் மூலம் ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளை மனண வசனம் பாடமாக்குவதற்கு ஊக்கமளிக்கும் முகமாக வழங்கப்பட்டது. பண உதவி வழங்கிய குடும்பத்தினருக்கு எமது நன்றிகள்.

நித்திய வாழ்வுக்குள் பிரவேசித்த **அன்னப்பா ஞானசிகாமணி அவர்களின் ஞாபகார்த்தமாக** அவரின் குடும்பத்தினர் 10000/= ரூபாவினை கொடுத்துள்ளனர். இது ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளுக்கான வரவு கூடுதலாக காணப்பட்ட 10 பிள்ளைகளுக்கு 1000/= ரூபாய்படி வழங்கப்படுகிறது. பண உதவிய வழங்கிய குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

## ஒளிவிழா

எமது ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளின் ஒளிவிழா நிகழ்வு 27.12.2017 மாலை 3.00 மணிக்கு ஓய்வுநாட் பாடசாலை அதிபர் திருமதி.S.சந்தியாபிள்ளை அவர் களின் தலமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விருந்தினர்களாக யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. J.ஞாணப்பிரகாசம் மற்றும் அதிபர் A.M.T.M. பாடசாலையின் அதிபர் திரு.S.ரஜீபன் அதிபர் மற்றும் எமது திருச்சபையின் அங்கத்தவரான திரு.J.I.தம்பிராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பிள்ளைகளின் நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றது.

## இன்னிசை ஆராதனை

எமது திருச்சபையின் இன்னிசை வழிபாடு 17.12.2017 காலை 7.30 மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெற்றது. இவ் இன்னிசை ஆராதனையில் வாலிபர்கள், ஓய்வு நாட் பாடசாலை பிள்ளைகள் பெண்கள் சங்கத்தினர் முது வாலிபர்கள் கலந்து சிறப்பித்தனர் கிறிஸ்மஸ் செய்தியினை C.A.C.M திருச்சபையின் தலைவர் வணக்கத்திற்குரிய T.தேவநேசன் அடிகளார் வழங்கினார்கள் பாடல்களை பழக்கிய போதகரம்மா திருமதி.டொறின் போல்சுரேஷ் அவர்கட்கும் இவ் ஆராதனை சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாக சபையினருக்கும் உதவி கரம் நீட்டிய வாலிபர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

## முது வாலிபர் பங்களிப்பு

எமது திருச்சபையின் முது வாலிபர்கள் இவ்வாண்டு தொடர்ந்தும் கிறிஸ்து பிறப்பு இன்னிசை ஆராதனையில் பாடல் ஒன்றை வழங்கி தங்களின் பங்களிப்பினை சிறப்பாக செய்தனர். இப்பாடல்களைப் பாடியவர்கள் திரு.A.அதிசயராஜா, திரு.S.அன்ரூ திரு.T.சஜீ, திரு.S.பாஸ்கரன் ஆகியோருக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

## முருகண்டியில் சமூகப்பணி

எமது திருச்சபையின் சமூகப்பணி குழவினர் வன்னிப்பிரதேசத்திலிருக்கிற கோனாவில் திருச்சபைக்கு சென்று வறுமைக்கோட்டின் கீழ் வ்ாழும் திருச்சபை பிள்ளை களுக்கும் மாலை நேர வகுப்பு பிள்ளைகளுக்கும் ஒரு தொகுதி கற்றல் உபகரணங் களை வழங்கி பிள்ளைகளை மகிழ்வித்தனர். இப்பணியில் முன்னின்று உழைத்த அனைவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக.

## தபால் முத்திரை

1820ம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த இரண்டாவது தொகுதி மிஷனரி குழுவினரின் அங்கத்தவர்களுள் ஜோன்ஸ்கடரும் ஒருவர் இவரே முதலாவது மருத்துவ மிஷனரி ஆவார். முதன் முதலில் பண்டத்தெரிப்பில் மேலைத்தேய மருத்துவ நிலையம் ஒன்றை உருவாக்கியவரும் இவரே. எமது அமெரிக்கன் சிலேன் மிஷனின் 200வது ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் அன்று மாலை 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு திருச்சபையின் நன்றி செலுத்தும் வழிபாடும் அதனை தொடர்ந்து விருந்தினர் மண்டபத்தில் வைத்தியர் ஜோன் ஸ்கடர் அவர்களின்

நினைவாக தபால் முத்திரை இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் உதவியுடன் வெளியீடு செய்யப்பட்டது.

## விஞ்ஞான துறையின் பீடாதிபதியை வாழ்த்துகின்றோம்

எமது திருச்சபையின் அங்கத்தவரும் சி.ஏ.சி.ம் திருச்சபையின் முன்னாள் உபதலைவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி J.பிறின்ஸ் ஜெயதேவன் அவர்கள் விஞ்ஞான துறையின் பீடாதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரை எமது திருச்சபையின் சார்பாக வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைவதோடு இவரின் பணி சிறக்க இறையருள் வேண்டுகின்றோம்.

## திடப்படுத்தல் வழிபாடு

எமது சபை பிள்ளைகளுக்கான அருட்சாதனமாம் திருவிருந்தினை பெற்றுக் கொள்ளும் ஆராதனை 27.07.2017 காலை 7.30 மணிக்கு CACM திருச்சபையின் தலைவர் வணக்கத்துக்குரிய T.தேவநேசன் அடிகளாரின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ் ஆராதனைக்கு உதவியாக சபைக்குருவானவர் செயலாற்றினார். இவ்வழிபாட்டில் பிள்ளைகள் திருச்சபையின் முழு அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டார்கள்.


| | |
|---|---|
| N.சாமிலா | N.டில்ஷான் |
| A.துவாரகா | K.பிரகேஷ் |
| Y.வேஜினா | K.கனிஸ்டன் |
| A.மிர்னாளினி | R.பிரவீன் |
| N.சர்மிலா | N.டிலான் |
| P.ஆர்த்தி | S.சின்னையா |
| N.தர்மினா | S.சுலக்ஷனா |


## விருந்தினர் வருகை

இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்கலாநிதி டான்சன்கார் மற்றும் அருட்கலாநிதி ஜெயகரன் ஆகியோர் எமது ஆலயத்துக்கு வருகை தந்து ஞாயிறு வழிபாடுகளில் அருளுரையாற்றினார்கள்.



எமது திருச்சபையில் நடைபெற்ற
பிரதாப் தனுஷியா தம்பதிகளின் திருமணம்





சகோதர திருச்சபைகளில் நடைபெற்ற திருமணங்கள்

டெறிக் இவோன்
தம்பதிகள்

ஞானசீலன் சோபனா
தம்பதிகள்



## எமது நன்றிகள்

எனது ஆன்மீகப் பணியை முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருந்த சபையின் நிர்வாக செயற்குழுவினர், விசேடமாக பொருளாளர் திரு.A.C.நவறஞ்சிற், செயலாளர் திரு.A.அதிசயராஜா மீக்கன்மார் மற்றும் வாலிபர்கள், முதுவாலிபர்கள், பெண்கள் சங்கத்தினர், ஓய்வுநாள் பாடசாலை குடும்பத்தினர், இறை மக்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## எனது நவாலித் திருச்சபை


இறைபணி ஆற்றி வரும் நவாலித் திருச்சபை 158 ஆண்டுகள் வழியாக தனது ஆன்மீக பயணத்தில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த விசுவாச பயணம் சோர்வின்றி செல்வதற்கு திருச்சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு குடும்பங்களும் அர்ப்பணிப்போடு பணிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாகும். ஒவ்வொரு பெற்றோர்களும் தங்களின் பிள்ளைகள் எதிர்காலத்தில் இத்திருச்சபையை அர்ப்பணிப்போடும் விசுவாசத்தோடும் வழிநடத்த வேண்டியவர்கள் என்பதனை நினைத்து ஆலய வழிபாடுகளிலும் ஆன்மீக கல்வியிலும் ஈடுபடுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

மலர்கின்ற புதிய ஆண்டில் ஏசாயா 43:1ல் குறிப்பிடுவது போல உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது **"பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன். உன்னை பெயர்சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன்"** என்று சொன்னவிதமாக இவ்வாண்டு முழுவதும் இறை விசுவாசத்தில் எம்மை பெயர் சொல்லி அழைத்த கடவுளிடம் எம்மை முழுமையாக புதிய ஆண்டில் ஒப்புக்கொடுப்போமாக.

**"கடவுள் உங்களையும்**
**உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக"**

**அருட்பணி M.D.போல்சுரேஷ்**
**சபைக்குரு**

# விண்ணக வாழ்வில்



## செல்வி. ஜெபமணி யேசுசகாயம்

ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி
ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் - நவாலி திருச்சபை

ஓடினாள் ஓடினாள் ஆண்டவருக்காய் ஓடினாள்
பாடினாள் பாடினாள் ஆண்டவரைப் போற்றிப் பாடினாள்
ஓட்டத்தை முடித்துக்கொண்டாள் - இனி
நீடூடி காலம் ஆண்டவர் வீட்டினில்
ஆனந்தமாய் குடியிருப்பாள்
தொல்லைகள் இல்லை, துன்பங்கள் இல்லை
எல்லையில்லா ஆனந்தத்தில் திளைத்திருப்பாள்


ஜெபம் தான் அவளது மந்திரம் – அந்த
மந்திரத்தால் பலரின் துயரைப் போக்கினாள்
ஒரு கை கொடுப்பதை மறு கை தெரியாமல்
கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்கள்
குடும்பத்துக்காய் உழைத்தவள்
தியாகம் செய்வதற்கே பிறந்தவள்

ஆலயம் அவளது இல்லம் இயேசுவே அவள் சகாயம்
ஜெபமே அவளது மணிமாலை
திருப்பணிக்காய் கிடைக்கும் புகழ் மாலை
ஆங்கிலப் புலமையும் இசைத் திறமையும்
அவளை அணிசெய்த அணிகலன்கள்
தொண்ணூற்றைக் கடந்ததால் கண்ணூறுபட்டதே
கண்ணுக்குள் நிற்கிறாய் கண்கலங்கி அழுகின்றோம்



# கல்லறைத்தோட்ட வழிபாடு







புனித ஆத்துமாக்களின் தின வழிபாடு





# விண்ணக வாழ்வில்



செல்வி. நீற்றா ஜெயதேவி மண்டலநாயகம்



திருமதி. அரியஜோதி முருகேசுப்பிள்ளை

# உங்கள் தொடர்புகளுக்கு எமது விபரங்கள்


நவாலி திருச்சபை : (0094) 021 225 5818

வண. M.D. போல் சுரேஷ்
**சபைக்குரு** : (0094) 0775993459

திரு. A. அதிசயராஜா
**செயலாளர்** : (0094) 0776621819

திரு. A.C. தவறஞ்சிற்
**பொருளாளர்** : (0094)0776099855

திருச்சபையின் மின்னஞ்சல் முகவரி : navalychurch@yahoo.com
navalychurch@gmail.com




**தெளிந்த நீரில் கதிரவன் தெரிவது போல்**
**தெளிந்த மனதில் இறைவன் ஒளி தெரியும் – ஜான் பாரன்**

CHURCH OF THE AMERICAN CEYLON MISSION
THE RIGHTEOUS SHALL FLOURISH LIKE THE PALM TREE

# ANNUAL GENERAL MEETING 2017





## CHURCH OF THE AMERICAN CEYLON MISSION NAVALY CHURCH